19 OCT 2007
தலைமைச் செயலகம்
சென்னை-9.

இந்து சமய அறநிலையத்துறை–பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதி–பழனி பேருந்து நிலையத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.6.60 கோடியில் 50 விழுக்காடு இலவச நிதியாக ரூ.3.30 கோடி, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து பழனி நகராட்சிக்கு வழங்க–இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்கி–ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அநி.5.1) துறை</u>

<u>அரசாணை (நிலை) எண். 438</u> நாள் : 16.10.2007

படிக்கப்பட்டது :

1. அரசாணை (ப) எண்.69 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை நாள் 24.2.2007
2. இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரின் கடித ந.க.எண்.15905/2007/இசட் 3 நாள் 5.6.2007

---

<u>ஆணை :</u>

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், பழனி நகராட்சி பேருந்து நிலையத்தை ரூ.660.00 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்ய திருத்திய நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையிலும் 14.3.2007 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பழனி பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு திருக்கோயில் நிதி பங்களிப்பு சம்பந்தமாக விவாதிக்கப்பட்டபோது பழனி நகராட்சியின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாததால், மேற்படி திட்டத்தினை செயலாக்குவதற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.6.60 கோடி நிதியுதவியினை வழங்குமாறு திருக்கோயில் நிர்வாகத்தை கேட்டுக் கொள்ளப்பட்டதில் மொத்த மதிப்பீட்டில் 50% சதவீத இலவச நிதியுதவியினை பழனி நகராட்சிக்கு அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் வழங்குவதற்கு இந்து சமய அறநிலையத்துறை இசைவினைத் தெரிவித்தது எனவும், அதனடிப்படையில் 17.5.2007 அன்று நடைபெற்ற அறங்காவலர் குழு கூட்டத்தில் பக்தர்களின் நலனை முன்னிட்டு பேருந்து நிலைய விரிவாக்கப்பணி அவசியமானது என அறங்காவலர் குழு கருதுவதால் மேற்படி திட்டத்தினை நிறைவேற்றிட திருக்கோயில் பங்காக ரூ.3.30 கோடி பழனி நகராட்சிக்கு வழங்குவது தொடர்பாக ஆணையர் அனுமதி பெறுவது எனவும், ஆணையர் அனுமதி பெற்ற பின்பு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அறங்காவலர் குழுவினர் நேரில் சந்தித்து திருக்கோயில் பங்குத் தொகையினை அளிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அதனடிப்படையில் பழனி பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.6.60 கோடியில் 50 சதவிகித இலவச நிதியாக ரூ.3.30 கோடி திருக்கோயில் நிதியிலிருந்து நகராட்சிக்கு வழங்க உரிய அனுமதி ஆணை வழங்கலாம் என சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

ந.க. 35536/இ4(2)/07



3. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரின் மேற்கண்ட பரிந்துரையினை ஏற்று பழனி பேருந்து நிலையம் விரிவாக்கத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.6.60 கோடியில் 50 விழுக்காடு இலவச நிதியாக ரூ.3.30 கோடி (ரூபாய் மூன்று கோடியே முப்பது இலட்சம் மட்டும்) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து பழனி நகராட்சிக்கு வழங்க இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையருக்கு அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு.இராசேந்திரன்,
அரசு செயலாளர்

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை–34

நகல்
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
நிதித் (வருவாய் 2) துறை, சென்னை–9
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

18/10/07
பிரிவு அலுவலர்